## திருவேற்காடு நகராட்சி
## அவசரக் கூட்டம்

திருவேற்காடு நகராட்சியில் **2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நகராட்சி மன்ற கூடத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அவசரக்கூட்ட தீர்மான நகல்.**

### பொருள் எண்.1

திருவேற்காடு நகராட்சியில் **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2024–25**–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 1, 2, 3, 4 (ம) 5 | அரவிந்த நகர் 6வது தெரு (015001R835), சுந்தர விநாயகர் நகர் பிரதான சாலை (015002R806), கஸ்தூரிபாய் அவென்யூ 3வது தெரு (015002R857), முருகன் நகர் பிரதான சாலை (015003R848), இந்திரா காந்தி சாலை (015004R914), அருள் விநாயகர் 3வது குறுக்கு தெரு (015004R928), விஜய் நகர் 1வது தெரு (015005R017), தினேஷ் நகர் பாலாஜி பிரதான சாலை (015005R051), விஜய் நகர் பிரதான சாலை (015005R016) ஆகிய தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல்.. | 79.01 | 1. Janishree Corporate Services Private Limited | மதிப்பீட்டு தொகை |
| 2. | II | 6 (ம) 8 | பாடசாலை தெரு (015006R105), வேலம்மாள் பள்ளி சாலை (015006R076), காமராஜ் தெரு (015006R144), வி.ஜி.என் 1வது குறுக்கு தெரு (015008R219), வி.ஜி.என் 2வது குறுக்கு தெரு (015008R220), வி.ஜி.என் 2வது பிரதான சாலை (015008R213), வி.ஜி.என் 3வது குறுக்கு தெரு (015008R221), வி.ஜி.என் 4வது குறுக்கு தெரு (015008R222), அனுஷா தெரு (015008R231), நந்தகுமார் தெரு (015008R235), நந்தகுமார் தெரு விரிவாக்கம் (015008R248) ஆகிய தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 95.00 | 1. M/s.ஸ்ரீ செல்லியம்மன் அன் கோ<br>2. M/s V.மீனாள் அன் கோ | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.04 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | III | 8, 9, 10, 11, 13 (ம) 14 | ராஜாங்குப்பம் பெருமாள் தெரு (015008R194), அம்மன் நகர் பிரதான சாலை (015009R543), ராஜரத்தினம் நகர் பிரதான சாலை (015010R551), ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர் பிரதான சாலை (015011R690), உதவும் கரங்கள் சாலை (015011R762), சக்திவேல் நகர் | 87.00 | 1. M/s.ஸ்ரீ செல்லியம்மன் அன் கோ<br>2. M/s V.மீனாள் அன் கோ | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.04 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | பிரதான சாலை (015013R710), வடக்கு மாட வீதி (015013R729), அன்னை அபிராமி நகர் 1வது தெரு (015014R702), அன்னை அபிராமி நகர் 2வது தெரு (015014R703) ஆகிய தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | | | |
| 4. | IV | 15, 16, 17 (ம) 18 | சண்முகா நகர் 1வது தெரு (015015R503), சண்முகா நகர் 2வது தெரு (015015R505), வெள்ளாளர் தெரு (015016R303), ராஜீவ் நகர் பிள்ளையார் கோயில் தெரு (015016R304), காந்தி தெரு (015016R302), பாலாஜி நகர் (015017R434), செல்லம்மாள் நகர் (015017R405), ஜெய் நகர் (015017R407), காமாட்சி நகர் மேட்டுத் தெரு (015018R374), சூசை நகர் எம்.ஜி.ஆர் சாலை 1வது தெரு (015018R354) ஆகிய தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 73.00 | 1. M/s.ஸ்ரீ செல்லியம்மன் அன் கோ<br>2. M/s V.மீனாள் அன் கோ | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.04 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | V | 5 | செட்டி பிரதான சாலை (015005R001)–யினை தார்தளம் புதுப்பித்தல். | 61.00 | 1.M./s.ஆரோக்கியநாதன் கண்ஸ்ட்ரக்ஸன்.<br>2.திரு.M.கார்த்திக் | 0.29 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.10 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | VI | 6 (ம) 7 | வெள்ளாளர் தெரு (015006R098) மற்றும் அக்ரஹாரம் பிரதான சாலை (015007R167) ஆகிய தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 76.00 | 1. Janishree Corporate Services Private Limited | மதிப்பீட்டு தொகை |
| 7. | VII | 8, 10, 11 (ம) 15 | சந்தானலட்சுமி தெரு (015008R224), ஜனார்த்தனம் தெரு (015008R230), பார்வதி நகர் 2வது தெரு (015008R262), சத்தியநாராயணன் தெரு (015008R249). சத்யாபாமா தெரு (015008R255). சியாமளா தெரு (015008R229), ராம் குமார் தெரு (015008R228), மகாலட்சுமி நகர் பிரதான சாலை (015011R648), எஸ்.எல்.எஸ் லோகம்மாள் தெரு (015015R484), அர்ஜினமேடு பிரதான சாலை (015010R592) ஆகிய தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 64.60 | 1. M/s.ஸ்ரீ செல்லியம்மன் அன் கோ<br>2. M/s V.மீனாள் அன் கோ | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.01 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | VIII | 4, 12, 14, 16 (ம) 17 | கிருஷ்ணா நகர் பிரதான சாலை (015017R415), மகாலட்சுமி நகர் பிரதான சாலை (015016R325), அன்னை அபிராமி நகர் பிரதான சாலை (015014R701), கே.பி.எஸ் நகர் 1வது தெரு (015012R755), பெரிய | 93.00 | 1.M/s.ஆரோக்கிய நாதன் கண்ஸ்ட்ரக்ஸன் | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | கோலடி பெருமாள் கோயில் தெரு (015004R888) ஆகிய தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | | | |

**அலுவலக குறிப்பு :–**

மேற்படி ஒவ்வொரு பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 596** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.2

திருவேற்காடு நகராட்சியில் **நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி (MPLADS Fund) 2022–23–ம்**–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள **01.03.2024** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 14 | வார்டு எண்.14–ல் உயர்மின் கோபுர மின் விளக்கு அமைத்தல். (12மீ LED 6 எண்ணிக்கை 150W) | 4.35 | 1. M/s.SUNVIEW ENTERPRISES<br>2. M/s. Lakshmi Enterprises | 0.57 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.29 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

மேற்படி ஒவ்வொரு பணிகளில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 597** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.3

திருவேற்காடு நகராட்சியில் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி (MLA Fund) 2023–24**–ஆம் நிதியாண்டின் கீழ் கீழ்க்கண்ட கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள **07.03.2024** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 16 | வார்டு எண்.16 ராஜீவ் நகர், 3வது பிரதான சாலையில் தார்சாலை அமைத்தல். | 25.00 | 1. M/s.GPS Builders<br>2. New Mohana Construction | மதிப்பீட்டு தொகை 3.50 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :–

மேற்படி ஒவ்வொரு பணிகளில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 598** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.4

**சாலையோர வியாபாரிகளுக்கு Se Samridhi திட்டத்தின் கீழ் ஏற்கனவே வங்கியில் முதல் தவணை கடன் பெற்ற பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்களின் விபரத்தினை Se Samridhi திட்ட பளனாளிகளுக்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒரு நபருக்கு ஆன்லைன் பதிவேற்றம் செய்ய |
|---|---|---|
| 1. | சிந்து ஏஜென்ஸி | ரூ. 100/– |
| 2. | கோகுல் ஆன்லைன் சர்வீஸ் | ரூ. 125/– |
| 3. | கிருஷன் நெட் சென்டர் | ரூ. 182/– |

**மேற்கண்டவாறு மூன்று நிறுவனங்கள் விலைப்புள்ளி அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனங்களில் குறைவான விலைப்புள்ளி அளித்த சிந்து ஏஜென்ஸி என்ற நிறுவனத்திற்கு பதிவேற்ற பணியை செய்ய அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண். 599** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.5

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அயனம்பாக்கம் கிராமம் சர்வே எண்.**679/2A1, 679/2B -ல் 7100** ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள இடத்தினை மனைபிரிவு செய்ததினை தொடர்ந்து, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ந.க.எண்.L1/0262/2022 நாள்:23.06.2023–ல் மேற்கண்ட மனைபிரிவில் அமைந்த சாலைகள் மற்றும் பொது இடத்தினை தானபத்திரம் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்படைப்பு செய்ய **M/S. Nova Life Space Private Limited, Rep By Balachandran** தெரிவித்ததுள்ளதின் பேரில், மேற்கண்ட மனுதாரர் கொன்னூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.**4283/2023** மொத்த தாள்கள் **1** முதல் **16** வரை உள்ளவற்றை பதிவு செய்து சமர்பித்து உள்ளதினை பின்னேற்பு வழங்கிடவும், அதனை தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கண்ட மனை பிரிவு PPD/L.O.No.180/2023 நாள்: 26.06.2023 என எண்ணிடப்பட்டு, திட்ட அனுமதி எண்.**15495** என வழங்கப்பட்ட இடத்தில் அமைந்த **29** மனைகளுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ள மனைப்பிரிவு வரைப்படத்தில் சாலைகள் **1630** ச.மீ பரப்பளவில் மற்றும் பொது உபயோக இடத்தினை ஆணையாளர் திருவேற்காடு நகராட்சி என்ற பெயரில் தான பத்திரம் எண்.**4283/2023** நாள்:**16.06.2023–**ல் பெறப்பட்டுள்ளது. பொறியியல் குறிப்பில் மனுதாரர் மூலம் சாலைகள் மற்றும் தெரு மின் விளக்கு வசதிகள் நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட மனைப்பிரிவில் மழைநீர் வடிகால்வாய் வசதிகள் மேற்கொள்ள கட்டணம் ரூ.**30.00** இலட்சம் ரசீது எண்.**0014421** நாள்.**11.03.2024** மற்றும் குடிநீர் வசதிகள் மேற்கொள்ள கட்டணம்

ரூ.**4.00** இலட்சம் ரசீது எண்.**0014422** நாள்.**11.03.2024**–ல் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மனைப்பிரிவு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடிதத்துடன் வரப்பெற்றுள்ள வரைப்படத்தில் உள்ளபடி சாலைகள் மற்றும் பொது உபயோக இடத்தினை ஆணையாளர் திருவேற்காடு நகராட்சிக்கு தான பத்திரத்தின் மூலம் தானமாக பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட மனைபிரிவிற்கு அனுமதி வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண். 600** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட சுந்தரசோழவரம் கிராமம் சர்வே எண்.47/5A & 47/5B-ல் 2250 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள இடத்தினை மனைபிரிவு செய்ததினை தொடர்ந்து, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ந.க.எண்.L1/0144/2023 நாள்:03.10.2023–ல் மேற்கண்ட மனைபிரிவில் அமைந்த சாலைகள் மற்றும் பொது இடத்தினை தானபத்திரம் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்படைப்பு செய்ய **Thiru.Ravi & 9 Others** தெரிவித்ததுள்ளதின் பேரில், மேற்கண்ட சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும வரைபடத்தில் உள்ள

சாலைகள் **427** ச.மீ பரப்பளவில் இடத்தினை ஆணையாளர் திருவேற்காடு நகராட்சி பெயரில் மனுதாரர் குன்றத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.**16606/2023** மொத்த தாள்கள் **1** முதல் **29** வரை உள்ளவற்றை **25.08.2023**–ல் தான பத்திரம் பதிவு செய்து உள்ளதினை பின்னேற்பு வழங்கிடவும், அதனை தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கண்ட மனை பிரிவு PPD/L.O.No.243/2023 நாள்:03.10.2023 என எண்ணிடப்பட்டு, திட்ட அனுமதி எண்.**15562** என வழங்கப்பட்ட இடத்தில் அமைந்த **8** மனைகளுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ள வரைபடத்தின் படி உள்ள சாலைகயில் பொறியியல் பிரிவின் குறிப்பின்படி அடிப்படை வசதிகள் செய்ய உரிய தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட மனைபிரிவுகளில் உள்ள சாலைகளில் தார் சாலை அமைத்தும் அடிப்படை வசதிகள் ஆகியன தனது சொந்த செலவில் செய்து பொறியியல் பிரிவில் புகைப்படம் சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட மனைப்பிரிவில் மனுதாரர் மூலம் சாலைகள் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தெரு மின் விளக்கு வசதிகள் குடிநீர் வசதி நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என **11.03.2024** தேதிய பொறியியல் பிரிவின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடிதத்துடன் வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். L1/0144/2023 நாள்:03.10.2023-ன் படி உள்ள நிபந்தனைகள் படியும் அங்கீகாரம் செய்யப்பட்ட வரைப்படத்தின் படியும் மற்றும் மேற்கண்ட மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகளை ஆணையாளர் திருவேற்காடு நகராட்சிக்கு தான பத்திரத்தின் மூலம் தானமாக பெற்றதை தொடர்ந்தும், மேற்கண்ட மனைபிரிவிற்கு அனுமதி வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண். 601** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கிய சிறப்பு நிலை நகராட்சி ஆகும். இங்கு 30,554 வீடுகளும் 1,16,219 என்ற அளவில் மக்கள் தொகையும் உள்ளது. இங்கு தினசரி 38.35 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உற்பத்தி ஆகிறது.

கடந்த 01.07.2023 முதல் திருவேற்காடு நகராட்சியில் KPI எனப்படும் புதிய திடக்கழிவு மேலாண்மை திட்ட அளவுகோளின் படி பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி சேகரம் செய்யப்படும் மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள் மற்றும்

சேர்ப்பிக்கப்படும் பிரிக்க முடியாத கழிவுகள், போன்றவற்றிற்கும் சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டு முறைப்படி அகற்றப்படுவதற்கான திடக்கழிவுகளுக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது வரை தரம் பிரித்தலில் 69% என்ற அளவில் அதாவது 70% என்ற அளவிலான மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் பிரிக்கப்படுகின்றன. இத்தரத்தினை மேம்படுத்த முயற்சி செய்யப்பட்டு வரப்படுகிறது. நமது நகராட்சிக்கென்று பிரிக்க இயலாத திடக்கழிவுகள் மற்றும் இதர கழிவுகளை சேர்ப்பிக்க இடம் ஏதும் இல்லை. எனினும் அவற்றினை கோலடி திடக்கழிவு வளாகத்தில் சேர்ப்பித்து வருகிறோம். அவ்விதம் சேர்ப்பித்த கழிவுகள் கடந்த இரு மாதங்களாக சேர்ந்து உள்ளது.

அதே சமயம், நகரில் சேகரம் ஆகும் தாவரக்கழிவுகளும் கோலடி திடக்கழிவு வளாகத்தில் தான் சேர்ப்பிக்கப்பட்டு வரப்படுகிறது. KPI முறையில் நகரில் சேகரமாகும் தாவரக்கழிவுகளை அப்புறப்படுத்துவது குறித்து குறிப்பிடப்படவில்லை. எனவே அவற்றினை நகராட்சி வெளிக்கொணர்வு ஒப்பந்ததாரர் அகற்றுவதற்கான வழிமுறைகள் ஏதும் இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாகம் தான் அவற்றினை அகற்றிட வேண்டிய சூழல் உள்ளது. மேலும் பொங்கல் பண்டிகை காலத்திய திடக்கழிவு களும் அங்கேயே சேர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

தற்போது கோலடி வளாகத்தில் உள்ள பிரிக்க இயலாத கழிவுகள் மற்றும் தாவரக்கழிவுகளின் உத்தேசமான எடை அளவு விவரம் பின்வருமாறு:–

**01.01.2024 முதல் 19.02.2024 வரை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பிரிக்க இயலாத கழிவுகள் (20%) | – | 50x8MT | = | 400 MT |
| 2. | தாவரக்கழிவுகள் | – | 50x2MT | = | 100 MT |
| 3. | பொங்கல் பண்டிகை காலத்திய கரும்பு சக்கை போன்ற கழிவுகள் | – | | = | 25 MT |
| | மொத்தம் | | | = | **525 MT** |

இதில் 20.02.2024 முதல் ஒப்பந்த நடைமுறை முடித்து, பணி உத்திரவு வழங்கி பிரிக்க இயலாத கழிவுகளை அகற்றும் பணி ஆரம்பிக்கும் நாள் வரையிலான காலகட்டத்தில் உருவாகும் பிரிக்க ,இயலாத கழிவுகள், தாவரக்கழிவுகளையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| உத்தேச எடை அளவு | = | 160 MT+ 40 MT= 200 MT |
| ஆக மொத்தமாக அகற்றப்பட வேண்டிய திடக்கழிவுகளின் எடை (உத்தேசமாக) | = | 525 MT+200 MT=725 MT |

மேற்குறிப்பிட்ட உத்தேச அளவிலான திடக்கழிவுகள் கோலடி திடக்கழிவு வளாகத்தில் தேங்கி உள்ளது. அவற்றினை அகற்றும் பட்சத்தில் தான், மேற்கொண்டு கோலடி திடக்கழிவு வளாகத்தில் பிரிக்க இயலாத மற்றும் இதர கழிவுகளை சேர்ப்பிக்க இயலும்.

எனவே அவசர அவசியம் கருதி மேற்குறிப்பிட்ட அளவிலான கழிவுகளினை அப்புறப்படுத்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்படவும், அக்கழிவுகளை அகற்றிட துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் அவர்களால் 28.02.2024 தேதிய குறிப்பில் பரிந்துரைக்கப்பட்டதை ஏற்று ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.9.90/–இலட்சத்திற்கு பொது நிதியில் பணிகளை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்6

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 602** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.8

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் வறட்சி சமாளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணியினை அத்தியவசியமான பணியாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | – | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மின்மோட்டார்களுக்கு தேவையான உதிரி பாகங்கள் சப்ளை செய்தல். | 7.50 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 603** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.9

திருவேற்காடு பெரு நகராட்சி, பொது சுகாதார பிரிவுக்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.1105/2023/எச்1 , நாள்.03.10.2023–ன் படி 105 DBC பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணி செய்து வருகிறார்கள். மேற்குறிப்பிட்ட பணி உத்திரவின்படி பணிக்காலம் வரும் 31.03.2024 அன்றோடு முடிவடைகிறது. தற்போது வர இருக்கும் நாடாளுமன்ற தேர்தல் 2024, அறிவிக்கப்பட்டு உள்ள சூழலில் மேற்குறிப்பிட்ட DBC பணியின் அவசர அவசியம் கருதி இப்பொது சுகாதார பணியினை கூடுதலாக 1 மாதம் (01.04.2024 முதல் 30.04.2024 வரை) கால நீட்டிப்பு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 604** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.10

திருவள்ளூர் மாவட்டம் எண்.006 ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வாக்குசாவடி மையங்களில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு வாக்குசாவடி மையங்களுக்கு தேவையான கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ள அடிப்படை வசதி AMF (Assured Minimum Facilities) பணிகளை மேற்கொள்ளுமாறும், மேலும் வாக்குச்சாவடி பாகம் எண்.435 மற்றும் 435–ல் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, அயனம்பாக்கத்தில் உள்ள பள்ளியில் வகுப்பளைகளை இரண்டாக பிரித்து (Partition) தரகோரி உதவி வாக்காளர் பதிவு அலுவலர், 006.ஆவடி சட்டமன்றத் தொகுதி மற்றும் வட்டாட்சியர், ஆவடி அவர்களின் கடித ந.க.எண்.TAHAVD.86/2024/இ1, நாள்.13.03.2024–ன் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1. | மேற்கூரை (Roof) |

| | |
|---|---|
| 2. | சாய்தளம் (Ramp) |
| 3. | குடிதண்ணீர் (Water Supply) |
| 4. | கழிவறை வசதி (Toilet) |
| 5. | தேவையான மேஜை, நாற்காலி (Table & Chair) ஆகியவற்றில் உள்ள பழுதுகள் |

மேற்கண்ட பணிகளுடன் அரசியல் கட்சிகளின் சுவர் விளம்பரங்களை அகற்றுதல் (Removal of Defacement) மற்றும் தேர்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்வது அவசியம் ஆகும். எனவே, மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி தேர்தல் பணிக்கான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 605** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.11

இந்நகராட்சியின் 18 வார்டு பகுதிகளிலும், கீழ்க்கண்ட விவரப்படியான 7142 எண்ணிக்கையிலான தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | தெருமின் விளக்குகளின் விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | 1 x 40 W Tube Light | 1343 |
| 2 | 4 X 36W CFL Lights | 1651 |
| 3 | 2 x 36W CFL Lights | 58 |
| 4 | 4 x 24W CFL Lights | 771 |
| 5 | 2 x 24W CFL Lights | 648 |
| 6 | 250W SV Lamp | 936 |
| 7 | 150W SV Lamp | 403 |
| 8 | 1 x 400W SV Lamp | 484 |
| 9 | 2 x 400W SV Lamp | 266 |
| 10 | 70W SV Lamp | 60 |
| 11 | 60W LED Fittings | 60 |
| 12 | 90W LED Fittings | 208 |
| 13 | 48W LED Fittings | 250 |
| 14 | 150 W LED Fittings | 4 |
| | **Total** | **7142** |

மேற்கண்ட தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த நீட்டிப்புக்காலம் 31.03.2024–வுடன் முடிவடையும் நிலையில் உள்ளது. தற்போது இந்நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து தெருமின்விளக்குகளையும் மின்சிக்கன பயன்பாட்டின் அவசியம் கருதி **LED** விளக்குகளாக மாற்றியமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்படும் நிலை உள்ளது. இப்பணியினை முடிக்க அதற்கான ஒப்பந்த காலம் 9 மாதங்களாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதுநாள் வரை பொதுமக்களின் அடிப்படை வசதியான தெருமின் விளக்குகளின் பராமரிப்பு பணிகளை ஏற்கனவே பணி மேற்கொள்ளும் நிறுவனங்கள் மூலம் பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கி பணியினை தொடருமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரக, தலைமை பொறியாளர் அவர்களின் காணொலி ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

எனவே, பொதுமக்களின் அடிப்படை வசதியான தெருமின் விளக்குகளின் பராமரிப்பு பணியின் அவசியம் கருதி தற்போது பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் M/s.சன்வீயூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாருக்கு 01.04.2024 முதல் 30.06.2024 வரையிலான மூன்று மாத காலத்திற்கு தற்போதுள்ள நிபந்தனைகளின்படி அதே விலைவிகிதத்தில் பணியினை தொடரவும் அதற்கான செலவினம் ரூ.32.50 இலட்சத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 606** **நாள். 15.03.2024**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

*ஒம்/–.* **E. கிருஷ்ணமூர்த்தி**

**நகர்மன்றத் தலைவர்,**
**திருவேற்காடு**

**/உண்மை நகல்/**

**ஆணையர்,**

**திருவேற்காடு நகராட்சி.**